# தற்கொலையினால் காவுகொள்ளப்பட்டுள்ள மனித உயிர்களும் சவால்மிக்க காலப்பகுதிகளில் கத்தோலிக்கத் திரு அவையின் செயற்பாடுகளும் (மட்டக்களப்பு மாவட்டத்தினை மையப்படுத்திய கள ஆய்வு 2009 - 2022)

**யே. ஹேரோசினி**
(முதுதத்துவமாணி ஆய்வாளர், உயர் பட்டப் படிப்புகள் பீடம்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
herosinijesurasa@gmail.com

போருக்குப் பிற்பட்ட காலப்பகுதியானது பெரிதும் சவால்மிக்கதாக அமைந்துள்ளது. 2009 - 2022ம் ஆண்டு காலப்பகுதிகளில் மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலை வீதமானது அதிகரித்துள்ளது. தற்கொலையினால் மாண்புமிக்க மனித உயிர்கள் அதிகமாக காவுகொள்ளப்பட்டுள்ளதை வெளிக்கொணர்வது இவ்வாய்வின் பிரதான நோக்கமாகும். அதனைத் தடுப்பதற்காக கத்தோலிக்க திரு அவையினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகளை இவ்வாய்வு ஆய்விற்குட்படுத்துகிறது. ஆய்வுப்பிரச்சினையாக பின்வரும் விடயங்கள் அமைந்துள்ளன. அதாவது மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலைச் சம்பவங்கள் இடம்பெறுவது குடும்பங்களில் பல சிக்கல்களையும் நிம்மதியற்ற தன்மையையும் ஏற்படுத்தியுள்ளது. சமூகத்தில் தற்கொலை பற்றிய விழிப்புணர்வுச் செயற்பாட்டு திட்டங்கள் மிகக் குறைவாக உள்ளது. தற்கொலை மூலமாக உயிரை காவுகொள்ளச் செய்வதில் இளைஞர்கள், யுவதிகள் முதலிடத்தில் உள்ளார்கள். ஆய்வின் இலக்குகளாக இரண்டு முன்வைக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் தற்கொலைக்கான காரணிகளைப் பகுப்பாய்வு செய்தல். தற்கொலையைத் தடுப்பதற்கான செயற்பாட்டில் கத்தோலிக்க திரு அவையின் பங்கினை அடையாளம் காணுதல். மட்டக்களப்பு மாவட்டத்தில் மனித உயிரின் மாண்பினை நிலைநாட்டுகின்ற செயற்பாடுகளை கத்தோலிக்க திரு அவை மேற்கொண்டு வருகின்றது. தற்கொலையைத் தடுப்பதற்கான வழிமுறைகளை அடையாளப்படுத்தி நடைமுறைப்படுத்துவது இறைசாயலாகப் படைக்கப்பட்டவர்களுடைய கடமை என்பது ஆய்வின் கருதுகோளாக முன்வைக்கப்பட்டுள்ளது. இவ் ஆய்வில் தொகுத்தறிவு மற்றும் தோற்றப்பாட்டு முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. மட்டக்களப்பு மாவட்டத்தில் இடம்பெற்றுள்ள தற்கொலையின் எண்ணிக்கை, காரணங்கள், காவுகொள்ளப்பட்டுள்ள பாலினம் போன்ற தரவுகளை சேகரித்தல். இதற்காக பொலிஸ் நிலையம் மற்றும் போதனா வைத்தியசாலையின் அறிக்கைகளை மையப்படுத்தி தரவுகள் பெறப்படுதல். மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கி வருகின்ற எகெட் நிறுவனமானது தற்கொலையைத் தடுப்பதற்காக எவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுத்துள்ளது என்பதை ஆய்விற்கு உட்படுத்துதல். திருவிவிலியம், இரண்டாம் வத்திக்கான் சங்க ஏடுகள், கத்தோலிக்க திரு அவையின் மறைக்கல்வி ஏடு மற்றும் சுற்றுமடல்களில் மனித உயிரின் மாண்பு மற்றும் தற்கொலையைத் தடுத்தல் தொடர்பான தரவுகளை உள்வாங்குதல். பிரதான சமயங்கள் கூட தற்கொலையைத் தடுத்தல் அவசியம் என்பதனை புனித நூல்கள் வாயிலாக வலியுறுதியுள்ளன. ஆகவே மனித உயிரானது மாண்புமிக்கது; விலைமதிப்பற்றது என்பதனை இவ்வாய்வினூடாக அடையாளம் காண முடிகின்றது.

இவ்வாய்வு தற்கொலையை படிப்படியாக இல்லாதொழிப்பதற்கான முன்னெடுப்புக்கள் மற்றும் அதற்கான வழிகாட்டுதல்கள் பற்றிய முன்மொழிவுகளைத் தருவதாகவும் அமைந்துள்ளது. மனித உயிரின் மாண்பு தொடர்பான பிரக்ஞையை ஆழப்படுத்துகின்றது.

**திறவுச்சொற்கள்:**
மனித உயிர், தற்கொலை, மாண்பு, கத்தோலிக்க திரு அவை, இறைசாயல்.

## சைவசமயத்தைத் தழைத்தோங்கச் செய்ததில் திருஞானசம்பந்தரின் பங்களிப்பு

**கலாநிதி இ. ஜெயந்திரன்**
(முதுநிலை விரிவுரையாளர், சைவசித்தாந்தத்துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்)
jeyandran1981@gmail.com or jeyandran@unve.jfn.ac.lk

7-ஆம் நூற்றாண்டில் தமிழ் நாட்டில் நிலவிய அரசியல் காரணங்களால் சைவம் தன்னிலை குன்றிப் போனது. இவ்வேளைகளில் சைவத்தை நிலைபெறச் செய்ய அவதரித்தவர் திருஞானசம்பந்தராவர். இதனால் இவர் பரசமயக்கோளரி எனும் பெயரில் அழைக்கப்பட்டார். 'அரசன் எவ்வழி குடிகளும் அவ்வழி' எனும் கருத்துக்கமைய தமிழ் நாட்டில் சமண, பௌத்த மதங்கள் அரச மதங்களாகச் செல்வாக்குப் பெற்றன. இச்சமயங்கள் தவிர்ந்த ஏனைய சமயங்களைப் பின்பற்றும் உரிமை பறிக்கப்பட்டது. சைவசமயத்தைப் பின்பற்றுவர்கள் திருநீறு அணிந்து வருவதைக்கண்டால் கண்டு முட்டு என்றும் அவ்வாறு அணிந்து வருவதை ஒருவர் சொல்லிக் கேட்டால் கேட்டு முட்டு எனும் கீழ்நிலைக்குச் சைவம் புறந்தள்ளப்பட்டது. பாண்டியன் சைவத்தில் இருந்து சமணஞ் சார்ந்தமையால் பாண்டிமாதேவியான மங்கையர்கரசியார் மார்பில் தரிக்கும் மாங்கல்யத்துடன் திருநீறினை மறைத்துப் பூசினார். சைவாலயங்கள், சைவமடங்கள் அழிக்கப்பட்டன. அவை இருந்த இடத்தில் சமண, பௌத்தப் பள்ளிகள் கட்டப்பட்டன. சைவத்தில் இருந்தோர் பலர் பிறசமங்களுக்கு மதமாற்றப்பட்டனர். அவ்வாறு மதமாறியவரில் திருநாவுக்கரசு நாயனாரும் ஒருவர். அவர் மீண்டும் சைவத்தைச் சார்ந்தபோது சமணர்கள் பல்லவ மன்னனுடன் இணைந்து பல இன்னல்களை விளைவித்தனர். அவற்றில் இருந்து இறையருளால் மீண்டார். ஆனால் திருஞானசம்பந்தர் அவதாரம் சைவத்தை நிலைபெறச் செய்ய அமைந்தது என்பதை, 'வேதநெறி தழைத்தோங்க மிகு சைவத் துறை விழங்க' எனச் சேக்கிழார் சுவாமிகள் கூறுகிறார். தமிழ் ஆழுமையின் அடையாளமாக ஆழுடைபிள்ளை திகழ்ந்தார். தலைவனுக்கு இருக்க வேண்டிய அத்தனை தகுதிப்பாடும் அவரிடம் காணப்பட்டது. சைவத்துக்கு புறச்சமயங்களால் ஏற்பட்ட இடையூறுகளைக் களைந்ததுபோல உட்சமய சாதி சம்பிரதாயங்களையும் மாற்றி அமைத்தார். தாழ்ந்த குலத்தவரான திருநீலகண்ட யாழ்பாணருக்கு உயர்ந்த இடம் தந்தார். சைவத்தில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அற்புதங்களைச்